| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி. |

ந.க.எண். 021504 /பி1 /2022 நாள் : 20.03.2023

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு ஏப்ரல் 2023 – தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளர்கள் / தலைமையாசிரியர்கள் – விடைத்தாளுடன் முகப்புத்தாள் தைத்தல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

******

நடைபெறவுள்ள ஏப்ரல் 2023 இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வுகளுக்கென தேர்வு மையங்களில் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு வழங்கப்படவேண்டிய முதன்மை விடைத்தாட்களின் வகைகள் மற்றும் முதன்மை விடைத்தாளுடன் வைத்து தைக்க வேண்டிய வரைக்கட்டத்தாள் ஆகியவற்றின் விவரம் இத்துடன் இணைத்தனுப்பி வைக்கப்படுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர்கள், மேற்குறிப்பிட்டவாறு அனுப்பி வைக்கப்படும் அறிவுரைகளை தங்கள் மாவட்டத்திலுள்ள தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள்/ தலைமையாசிரியர்களுக்கு, தேவையான எண்ணிக்கையில் நகல் எடுத்து வழங்குமாறும், இப்பொருள் தொடர்பான தனிக் கவனம் செலுத்தி முதன்மைக் கண்காணிப்பாளர்கள்/ துறை அலுவலர்கள் கூட்டத்தில் உரிய அறிவுரைகளை வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–
இயக்குநர்

இணைப்பு :
முதன்மைக் கண்காணிப்பாளர்கள் / தலைமையாசிரியர்களுக்கான அறிவுரைகள்.

நகல்

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – இடைநிலைத் தேர்வு மையங்களுக்கு எழுதுபொருட்கள் வழங்கும் பொருட்டு நகல் அனுப்பி வைக்கப்படுகிறது.
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
   – தகவலுக்காக வழங்கப்படுகிறது.
3. கண்காணிப்பாளர், Kபிரிவு (அலுவலகம்)

**இடைநிலைப் பள்ளி விடுப்பு சான்றிதழ் பொதுத் தேர்வு – ஏப்ரல் 2023**

**முதன்மை விடைத்தாள் வழங்குதல் குறித்து தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள்/ தலைமையாசிரியர்களுக்கு வழங்கப்படும் அறிவுரைகள்:–**

ஏப்ரல் 2023–ல் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை தங்கள் மையத்தில் எழுதும் தேர்வர்கள் எந்தப் பாடம் தேர்வெழுதவுள்ளனர் என்பதனை, முதன்மைக் கண்காணிப்பாளர்கள் / தலைமையாசிரியர்கள் நன்கு உறுதி செய்து கொண்டு, அந்தந்த பாடத்திற்கான முகப்புத் தாட்களை கீழ் கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு முதன்மை விடைத்தாளுடன் வைத்து தைக்க வேண்டும்.

| **பாடம்** | **தேர்வர்களுக்கு வழங்கப்பட வேண்டிய முதன்மை விடைத்தாட்கள்** |
|---|---|
| தமிழ் | SSLC – Tamil<br>விடைத்தாளின் மதிப்பெண் பக்கத்தில் வினா வாரியாக மொத்தம் என்ற கலத்தில் 60 வினா எண்கள் அச்சிடப்பட்டிருக்கும்.<br>**முதன்மை விடைத்தாளில் அச்சிடப்பட்டுள்ள படிவங்கள் :–**<br>1. நூலக உறுப்பினர் படிவம்.<br>2. மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவம்.<br>3. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்<br>4. பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புதல். |
| பிறமொழிப்பாடம் (Other Language) | SSLC – Language |
| ஆங்கிலம் | SSLC – Language |
| கணிதம் மற்றும் அறிவியல் | SSLC<br>(கணிதப்பாடத்திற்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாளில் கடைசி தாளுக்கு முன்னர் ஒரு வரைகட்டத்தாளை வைத்து தைக்க வேண்டும்) |
| விருப்ப மொழிப்பாடம் (பகுதி –IV) (Optional Language) | SSLC – Language |
| சமூக அறிவியல் | SSLC – Social Science<br>விடைத்தாளின் மதிப்பெண் பக்கத்தில் வினா வாரியாக மொத்தம் என்ற கலத்தில் 60 வினா எண்கள் அச்சிடப்பட்டிருக்கும்.<br>**முதன்மை விடைத்தாளில் அச்சிடப்பட்டுள்ள வரைபடங்கள்:–**<br>1. இந்திய வரைபடம் –2<br>2. உலக வரைபடம் –1<br>3. தமிழ்நாடு வரைபடம் –1 |

எனவே, முதன்மைக் கண்காணிப்பாளர்கள்/தலைமையாசிரியர்கள் இதில் எவ்வித தவறும் நேராத வண்ணம், ஒவ்வொரு பாடத்திற்கான முகப்புத் தாட்களும், அந்தந்த பாடங்களுக்கான முதன்மை விடைத்தாளுடன் இணைத்து தைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

**ஒம்/–**
**இயக்குநர்**